விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 159 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 13 சனிக்கிழமை (27.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# நாடு முன்னேற வேண்டுமெனில் அரசியல் தீர்வே ஒரே வழி

## சஜித்திடம் சம்பந்தன் நேரில் எடுத்துரைப்பு



(கொழும்பு)

**நாடு முன்னேற வேண்டுமெனில் நிலையான - நிரந்தர அரசியல் தீர்வை விரைந்து காண்பதே ஒரே வழி என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேரில் எடுத்துரைத்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று முன்தினம் மாலை சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்றது.

மேற்படி சந்திப்பு தொடர்பில் சம்பந்தன் எம்.பியிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "நாம் இருவரும் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் பேசினோம். எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் பேசினோம். பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி தொடர்பிலும் பேசினோம். அரசியல் தீர்வு குறித்தும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

11

## இளவாலையில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

இளவாலை பகுதியில் முதியவர் ஒருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த முதியவர் வீட்டில் தனியாக வசித்து வந்த நிலையில் வீட்டின் உள்ளே தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

இதனையடுத்து

11

## இலங்கை அரசு அனுமதி வழங்கினால் அணுமின் நிலையம் நிர்மாணம்

### இலங்கைக்கான ரஷ்ய தூதுவர்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கினால், நாட்டில் அணு மின் உற்பத்தி நிலையத்தை (Nuclear Power Plant) நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ள தமது நாடு தயாராகவுள்ளதாக இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோக பூர்வ டுவிட்டர் தளத்தில் இந்த விடயம் தொடர்பில் பதிவிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கையின் எரிசக்தி அமைச்சர் உள்ளிட்ட உயர் மட்ட அதிகாரிகளு

11

## கொடிகாமத்தில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் மரணம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுது மட்டுவாழ் பகுதி

11

## அபாயக் கட்டத்தில் இலங்கை 120 மருந்துகளுக்கு பற்றாக்குறை

### இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் 120க்கும் அதிகமான மருந்துகளுக்கு பற்றாக்குறை நிலவுவதால் அபாயக் கட்டத்தை இலங்கை எதிர்நோக்கியுள்ளதாக இலங்கை மருத்துவ சங்கம் எச்சரித்துள்ளது.

நேற்று ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில்,

வலி நிவாரணிகள், நீரிழிவு, புற்றுநோய் மற்றும் இதய நோயாளிகளுக்கான மருந்துகள் உட்பட 120க்கும் அதிகமான மருந்து

11

## யாழ்.போதனா வைத்தியசாலையில் வயிற்றுக்குத்து காரணமாக 3 வயது குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)


வயிற்றுக்குத்து காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட மூன்று வயதேயான பெண்குழந்தை ஒன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

குழந்தை கைவேலி புதுக்குடியிருப்பைச்சேர்ந்த கனகரட்ணம் ஹம்சிகா என்ற பெண் குழந்தையே உயிரிழந்ததாகும்.

குழந்தைக்கு கடந்த 20ஆம் திகதி

11

## இளம் மருத்துவர் மாரடைப்பால் மரணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இளம் மருத்துவர் ஒருவர் மாரடைப்பால் மரணமடைந்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மனநல சிகிச்சை பிரிவில் கடமையாற்றிய வைத்தியர்

11


## இராட்சத சுனாமி ஏற்பட வாய்ப்பு

(கொழும்பு)

இராட்சத சுனாமி ஏற்படுவதற்கான

11

## இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விரைவில் தளர்த்தப்படும்



### மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

எதிர்காலத்தில் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின்

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இளவாலையில் 36 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- இளவாலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- இளவாலை சந்தியில் இருந்து 1 km தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள்,சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
- பரப்பு ஒன்றின் விலை 800,000 (எட்டு இலட்சம்)

(15747)

**076 165 3129, 076 911 9371**

# காணி விற்பனைக்கு

**யாழ் நகரில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

வாங்குவோர் நேரடித் தொடர்பு கொள்ளவும்.

**ராஜா சொத்து விற்பனை நிலையம்**

(C-6627)

**077 603 3259**

# காணி விற்பனைக்கு

**கைதடி A9 வீதியில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பக்க பாதை.
- கட்டட அனுமதி உண்டு.
- ஆவணங்கள் அனைத்தும் தேர்ச்சியானவை.
- அனைத்து தேவைக்கும் ஏற்ற காணி.

(15742)

**077 082 1010, 077 441 0919**

# நினைவஞ்சலி

| 36ம் ஆண்டு | 25ம் ஆண்டு | 18ம் ஆண்டு |
|---|---|---|
|  |  |  |
| திரு.அ.முத்துராஜா (முன்னாள் உப தபாலக அதிபர் தொண்டைமானாறு) | திரு.மு.பொன்னம்பலம் (இளைப்பாறிய அதிபர்) | திருமதி.பொ.இராசமணி |
| தோற்றம்: 03.04.1930 | தோற்றம்: 25.12.1914 | தோற்றம்: 23.07.1916 |
| மறைவு: 27.05.1987 | மறைவு: 02.01.1998 | மறைவு: 26.02.2005 |

வருடங்கள் பல உருண்டோடினாலும்
உம் நினைவுகள் எம்மை விட்டகலாது
என்றும் உம் நினைவுடன் வாழும் குடும்ப உறவுகள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

முத்துவாசா,
கெருடாவில், தொண்டைமானாறு.

(C-6622)

குடும்பத்தினர்.

## Faculty of Arts
## University of Jaffna
## Walk-in Interview
## Counsellor and Reporting Officer (On Contract)

Department of Philosophy of the Faculty of Arts is seeking for an experienced Counsellor and Reporting Officer to join their MHPSS Lab for the period of two months from 10.06.2023. This role will involve providing counselling services to the students of the faculty.

**Qualifications**

- A professional certificate (or higher qualification) in counselling in recognized institution.
- Minimum three years' experience as a counsellor in the university or higher educational settings
- Should have sound knowledge of therapeutic process skills and psychotherapy

Payment: Rs 80,000/- (per month)

**Walk-in interview will be held at the Mini Board Room, Faculty of Arts, University of Jaffna, Thirunelvely on 05.06.2023 at 10.00 am.**

Eligible candidates are required to bring a copy of curriculum vitae and original certificates along with photocopies for the interview.

Registrar,
University of Jaffna.
26.05.2023

(C-6624)

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

(15739)

**077 638 5683**
**076 755 8606**

## உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-6625)

## அமெரிக்க லொத்தர் விசா

**V2 TRAVELS**

2022ம் ஆண்டு விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுகள் வெளியாகி விட்டன.



அதிஸ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டவர்களின் அடுத்த கட்ட விசா நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன.

0768226240 / 0768226241

(C-6625)

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 64 பரப்பு காணி விற்பனைக்கு**

- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி

(15739)

**076 739 0413**
**076 436 5814**
**077 065 4525**

## வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியான செய்தி

**கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்**

பிளாஸ்ரிக், பான்சி பொருட்கள், அலுமினிய சாமான்கள், சில்வர் சாமான்கள் பாடசாலை உபகரணங்கள், விளையாட்டு பொருட்கள், கிறீம் வகைகள், கவரிங் வகைகள், கிளினர், திரவியங்கள், கான்ட்வோஸ், கொம்போட், வாசனை திரவியங்கள், மாபிள் கிளினர், றூம் ஸ்பிறே, தையல் உபகரணங்கள், தையலுக்கு தேவையான மொடல் பட்டின்கள், மாபிள் பீங்கான்கள், றெயிபோம் பெட்டிகள், பாட்டா வகைகள், பேர்ஸ் வகைகள், அன்பளிப்பு பொருட்கள் மணிக்கூட்டு வகைகள்

**இவை அனைத்தும் 30 வீத கழிவுடன் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.**

என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(15739)

**சரவணபவன் பான்சி ஹவுஸ்**

**26/1 ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம்.**

உரிமையாளர்
தேவகலத்தாசன் (கரன்)

**021 315 5900**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பிரிவினைவாதிகளுக்கு முன்னால் மண்டியிடும் ஜனாதிபதி ரணில்

## கொழும்பில் அமைக்கப்படவுள்ள நினைவுத்தூபி குறித்து வெடித்தது சர்ச்சை



(கொழும்பு)

**போரில் இறந்த போராளிகளுக்கும் படைவீரர்களுக்கும் நினைவுத்தூபி அமைப்பதை ஒட்டுமொத்த தேசமே எதிர்க்க வேண்டும்.**

இது படைவீரர்களின் சமாதியில் சிறுநீர் கழிப்பதற்கு நிகரான செயலை அரசாங்கம் மேற்கொள்வதாக தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

கொடிய பயங்கரவாதிகளிமிருந்து நாட்டை மீட்டு எடுத்த படைவீரர்களுடன், பயங்கரவாதிகளையும் நினைவுகூரும் வகையில் கொழும்பில் அமைக்கப்படும் நினைவுத்தூபி குறித்து கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர கருத்து வெளியிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் வைத்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நினைவுத்தூபியை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ள நிலையில் இந்த இழிவான செயற்பாட்டை உடன் நிறுத்த வேண்டும்.

தமிழ் பிரிவினைவாதிகளுக்கு முன்னால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மண்டியிட்டு அவர்களின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறார் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# அபுதாபியில் தீ விபத்து

## இலங்கைப் பெண் உயிரிழப்பு

(அபுதாபி)

ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் உள்ள பானியாஸ் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் இலங்கைப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மேலும் அறுவர் உயிரிழந்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

குறித்த பெண் 2021 ஆம் ஆண்டு சுற்றுலா விசாவில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ்க்குச் சென்றதாக அவர் தெரிவித்தார். (நி)

# ஜனாதிபதி ரணில்-வியட்நாம் பிரதி பிரதமர் சந்திப்பு

(டோக்கியோ)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது ஜப்பான் விஜயத்தின் போது, வியட்நாமின் பிரதி பிரதமர் ட்ரான் லூக்வென்க்கை சந்தித்துள்ளார்.

இதன்போது, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், கலாசார உறவுகளை மேம்படுத்துவது குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் ஜப்பானின் டிஜிட்டல் அமைச்சர் டாரோ கொனோவையும் சந்தித்துள்ளார்.

இலங்கையின் அரச அலுவலகங்களை டிஜிட்டல் மயப்படுத்துவது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. (நி)

# இலங்கை போக்குவரத்து சபையில் 800 சாரதி, நடத்துநர் வெற்றிடங்கள்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையில் 800 சாரதி மற்றும் நடத்துநர் வெற்றிடங்கள் இருப்பதாக தெரியவந்துள்ளது.

சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் அரசாங்கத்தின் அனுமதியின் பேரில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என சபையின் அதிகாரிகள் குழுவிடம் தெரிவித்துள்ளதாக பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# அடுத்த மாதம் முதல் எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிப்பு

## அமைச்சர் காஞ்சன

(கொழும்பு)

தற்போது நடைமுறையில் உள்ள கியூ.ஆர் முறையிலான எரிபொருள் ஒதுக்கீடு அடுத்த மாதம் வரை தொடரவுள்ளது.

அடுத்த மாதம் மேற்கொள்ளப்படவுள்ள எரிபொருள் விலைத் திருத்தத்துடன் கியூ. ஆர் முறையிலான எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்படும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (நி)

# சொத்து விபரங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

(கொழும்பு)

சொத்து விபரங்கள் அறிக்கையை பகிரங்கப்படுத்தி நாட்டுக்கு முன்னுதாரணமாக செயற்படுமாறு தற்போதைய ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளிடம் விசேட கோரிக்கை விடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் திருத்தச் சட்டமூலத்தை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிகள் இவ்வாறு செயற்படும் போது அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் இவ்வாறு செயற்படுவதை தவிர்க்க முடியாது.

அத்துடன் தற்போதைய ஜனாதிபதி முன்னாள் ஜனாதிபதிகளின் சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளை பகிரங்கப்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## விமான நிலையத்தின்

# பிரமுகர்கள் பகுதியில் கடுமையாகும் கட்டுப்பாடுகள்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் பிரமுகர்களின் பகுதிகள் ஊடாக வெளிவரும் அனைத்து பிரமுகர்கள் மற்றும் அவர்களின் பொதிகளை கடுமையான சோதனைக்கு உட்படுத்த விமான நிலைய சுங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, பிரமுகர்களின் பிரிவு வழியாக விமான நிலையத்திலிருந்து புறப்படும் மற்றும் வரும் அனைத்து அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள் மற்றும் பிற முக்கியஸ்தர்கள் இனி விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் 8 கோடி ரூபா பெறுமதியான தங்கம் மற்றும் கைத்தொலைபேசிகளை எடுத்துச் சென்ற போது கைது செய்யப்பட்டதையடுத்து. இந்த பிரமுகர்களின் பகுதி வழியாக வரும்பிரமுகர்களை சோதனையிட சுங்கத்துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இந்த உயரடுக்கு முனையத்தின் ஊடாக நீண்ட காலமாக பிரமுகர்கள் பெருமளவிலான தடை செய்யப்பட்ட பொருட்களை நாட்டிற்குள் கொண்டு வந்திருக்கலாம் எனவும் அவர்கள் சந்தேகிக்கின்றனர்.

இந்த வழி மூலம் தங்கம், இரத்தினங்கள், பணம் மற்றும் போதைப்பொருட்கள் கூட நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாகவும் நம்பப்படுகிறது.

இனிமேல் இந்த பகுதிகளில் பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் பிரமுகர்கள் உரிய முறையில் சோதனை செய்ய சுங்கத் தலைமையகத்தில் இருந்து உத்தரவு வந்துள்ளதாக விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

# உள்ளூராட்சி விவகாரங்களுக்கான புதிய ஜனாதிபதி ஆலோசகர் நியமனம்



(கொழும்பு)

உள்ளூராட்சி விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகராக முன்னாள் கொழும்பு மேயர் ரோசி சேனாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார் என அவரின் ஊடகச் செயலாளர் விராஜ் தாரக சிங்கள ஊடக மொன்றிற்கு தெரிவித்தார்.

ரோசி சேனாநாயக்க இன்னும் குறித்த பதவி ஏற்க வில்லை. பெரும்பாலும் அடுத்த வாரம் பதவியேற்பார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மரமுந்திரிகை விளைச்சல் பாரிய வீழ்ச்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மரமுந்திரிகைச் செய்கை நிறைவடைந்த நிலையில், அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை மரமுந்திரிகைச் செய்கை விளைச்சல் பாரிய வீழ்ச்சியை கண்டுள்ளதாக மரமுந்திரிகைச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அடிக்கடி பெய்த மழை மற்றும் கடுமையான வெப்பமான கால நிலையே இதற்கான காரணமென விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனால் பூக்கள் கருகி காய்க்கும் வீதம் பெருமளவில் குறைவடைந்துள்ளதாகவும் இதன் காரணமாக மரமுந்திரிகை செய்கையாளர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இம்மாவட்டத்தில் இம்முறை 400 ஏக்கர் நிலப்பரப்பில் மரமுந்திரிகை செய்கை பண்ணப்பட்டதாக இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபன மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் எச்.பிடி. தயாரத்ன தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச அதிபர் வெற்றிக்கிண்ணம்

## தெல்லிப்பழை பிரதேச செயலகம் சம்பியன்



யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் 15 பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட, அரச அதிபர் வெற்றிக் கிண்ணப் போட்டியில், தெல்லிப்பழை பிரதேச செயலகம் அதிக வெற்றிகளைப் பெற்று முதலாம் இடத்தினைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

கடந்த 24ஆம் திகதி யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இறுதி நிகழ்வுகள் நடைபெற்றன.

தெல்லிப்பளை பிரதேச செயலகம் தடகளப் போட்டியிலும் பெண்களுக்கான துடுப்பாட்ட போட்டியிலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கயிறிழுத்தல் போட்டியிலும், ஆண்களு க்கான சதுரங்க போட்டியிலும் முதலாம் இடத்தினையும் பெண்களுக்கான சதுரங்க போட்டியிலும், கலப்பு பூப்பந்து போட்டியிலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தாச்சி போட்டியிலும் பெண்களுக்கான வலைப்பந்து போட்டியிலும் இரண்டாம் இடத்தினையும் பெற்று தெல்லிப்பழை பிரதேச செயலகம் அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்தினை தனதாக்கி கொண்டது. (4-6)

# உதைபந்தாட்டப் போட்டி

வடமராட்சி உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கமானது 40 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தத் தீர்மானித் துள்ளது.

கரவெட்டி, பருத்தித் துறை மற்றும் மருதங் கேணி ஆகிய பிரதேச செயலகங்களில் பதிவு செய்த கழகங்கள் மேற்படி சுற்றுப் போட்டியில் பங்குபற்ற முடியும் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் இச் சுற்றுப் போட்டி தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற வடமராட்சி உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கத்தின் தலைவர் ம.மதியழகன் (076 853 1257) செய லாளர் எ.எட்வின் (077 728 6315) ஆகியோருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4)


**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE**

**WALK - IN - INTERVIEW**

Walk in interview for appointments to the following posts will be held on 08.06.2023 at 09.30 a.m at the Board Room of the Faculty of Management Studies and Commerce, University of Jaffna.

**Temporary Lecturer / Temporary Demonstrator in Tourism and Hospitality Management**

| POST | SALARY SCALE |
|---|---|
| Temporary Lecturer | Rs.49,860/p.m. (Fixed) |
| Temporary Demonstrator | Rs.40,920/p.m. (Fixed) |

**Minimum Requirements/ Qualifications**

1. A Degree with Specialization in Tourism Management/ Hospitality/ Event Management with First or Second Class (Upper Division) Honours;

OR

2. A Degree with Specialization in Tourism Management/ Hospitality/ Event Management with Second Class (Lower Division) Honours;

OR

3. A Degree with Specialization in Marketing /Commerce with First or Second Class (Upper Division) Honours;

OR

4. (a) A Degree with Specialization in the relevant subject without Honours or any other degree with at least second class Honours and
   (b) A recognized postgraduate degree in the relevant subject.

In addition to the salary, the allowances approved by the University Grants Commission applicable to the posts will also be paid.

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at time with relevant certificates (original) along with certified copies, National Identity Card, Curriculum Vitae and **self-prepared application.**

Registrar

University of Jaffna

(C-6623)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2837

Search for people, places and things

### ராதிகா




### சித்தார்த்




### நிவாஷ்




### தர்சன்




### கோபிகா




### விதுசன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 2 வயதிற்குட்பட்ட சிறார்கள்

# இலத்திரனியல் திரைகளுடன் நேரத்தை செலவிடக் கூடாது

## உளவியல் நிபுணர் எச்சரிக்கை

**(கொழும்பு)**


**இரண்டு வயதுக்குட்பட்ட சிறார்கள் எந்தவிதமான இல த்திரனியல் திரைகளுடனும் நேரத்தை செலவிடக்கூடாது என சிறுவர் மற்றும் இளம்பருவ உளவியல் நிபுணர் மருத்துவர் தர்ஷனி ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

இலங்கை மன்றக் கல லூரியில் இடம்பெற்ற செய் தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளி யிட்ட போதே அவர் இத னைத் தெரிவித்தார்.

இரண்டு வயதுக்குட்பட்ட சிறார்கள் இலத்திரனியல் திரைகளில் நேரத்தை செலவிடுவது அவர்களின் அறிவுச்சார் திறன்களின் வளர்ச்சியில் எதிர்மறை யான பாதிப்பை ஏற்படுத்து கிறது.

இதன் மீதான தாக்கம் அவர் களுக்கு 10 முதல் 12 வயதாகும் போதே தெரிய வரும் என அவர் குறிப்பி ட்டுள்ளார்.

உலக சுகாதார அமைப் பின் பரிந்துரைகளின்படி, இரண்டு வயது முதல் 5 வயது வரையான சிறார் கள், தமது பெற்றோர்களின் கண் காணிப்பின் கீழ் நாளொன்றுக்கு 30 நிமிட ங்கள் முதல் ஒரு மணித் தியாலம் மாத்திரமே இலத் திரனியல் திரையை பயன் படுத்த முடியும்.



அதேநேரம், பதின்ம வய துடைய இளைஞர், யுவதிக ளின் அதிகரித்த சமூக ஊடக ங்களின் பாவனை காரணமாக அவ ர்களின் ஆளுமை வளர் ச்சியிலும் பாதிப்பு ஏற்பட்டு ள்ளதாகவும் அவர் குறிப்பி ட்டார்.

**மனித மூளையின் பின் பகுதியில் உள்ள உணர்ச்சி மூளையில் உணர்ச்சிகள் தொடர்பான விடயங்கள் விரைவாக வளரும்.**

**அவை மனித விருப்ப த்தை அடிப்படையாக கொண்டு செயற்படுகின் றன.**

இதன்காரணமாக, பதி ன்ம வயதுடைய வர்களின் மூளையில் அறிவுசார் திற ன்கள் தொடர்பான பகுதிகள் வளர சிறிது தாமதமாகு வதுடன் அதிக ரிகத்த சமூக ஊடகங்களின் பாவனை யால் அவர்களின் ஆளுமை வளர்ச்சியிலும் பாதி ப்பு ஏற்பட்டுள்ளதாக சிறுவர் மற்றும் இளம்பருவ உள வியல் நிபுணர் வைத்தியர் தர்ஷனி ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (நி)



## சம்பந்தன்- சஜித் சந்திப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்ப ந்தனுக்கும் இடை யிலான சந்திப்பொன்று சம்பந்தனின் இல்லத் தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

நாட்டில் நிலவும் அரசியல் நிலைமைகள் தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டதுடன், நாட்டின் ஜனநாயகத்திற்கு ஏற்பட் டுள்ள மரண அடி மற்றும் பொருளாதார ரீதியாக ஏற் பட்டுள்ள வீழ்ச்சி குறித்தும் இதன் போது விசேட கவ னம் செலுத்தப்பட்டன. (நி)

## கஞ்சாவுடன் பிடிபட்ட கார் தப்பியோட்டம்

### 3 பொலிஸார் பணி இடைநிறுத்தம்

பேலியகொடைப் பிரதேசத்தில் 24 கிலோ கேரளக் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் குறித்த கார் தப்பிச் சென்ற சம்ப வம் தொடர்பில் சப்-இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள தாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றைய இருவரும் பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் கான்ஸ்டபிள் என பொலிஸார் தெரிவித்தனர். 24 கிலோ கஞ்சாவுடன் கைது செய் யப்பட்ட சந்தேகநபர் காரில் தப்பிச் செல்லும் போது கைது செய்ய முய ற்சிக்காத காரணத்தினாலேயே இவர்கள் மூவரும் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (நி)

# இராசிபலன்

27.05.2023
வைகாசி 13, சனிக்கிழமை
சப்தமி காலை 6.46 மணிவரை
மகம் முன்னிரவு 10.45 மணிவரை

சுபநேரம் -2.52-04.22 மணிவரை
இராகுகாலம்-8.52-10.22 மணிவரை

சந்திராஷ்டமம்-
உத்தராடம், திருவோணம்

வளவன்

**மேஷம்** உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், தாழ்ந்த சுபாவமுண்டு.

**ரிஷபம்** உறவினர்கள் வழியில் எதிர்பார்த் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்

**மிதுனம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** உங்களின் யோசனைக்கு நல்பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நன்மைகள் நடைபெறும் நாள்.

**சிம்மம்** நண்பர்கள் ஒளிவுமறைவின்றிப் பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

**கன்னி** அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள், சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்,

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வருவார்கள், சாமர்த்தியமாகப் பேசி சாதனை படைக்கும் நாள், அரைகுறையாக இருந்த பகுதிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள், சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும் நாள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**மீனம்** உடல்நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள், உறவு பகை பாராது ஒற்றுமையாக இருப்பீர்கள், கௌரவமான நாள்.

**கோபமாகப் பேசுபவரை அமைதியால் வென்று விட வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் வதிரி முன்பள்ளி சிறுவர் சந்தை நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.
(படம்- மகாலிங்கம்)

# சிவன் ஆலயம் உடைத்து பெறுமதியான பொருட்கள் திருட்டு

## கொடிகாமத்தில் சம்பவம்



(சாவகச்சேரி)
கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணி-குடமியன் பகுதியில் அமைந்துள்ள புராதன சிவன் ஆலயம் ஒன்றினை உடைத்து பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு ஆலயத்திற்குள் நுழைந்த திருடர்கள் ஆலயத்தில் எழுந்தருளியிருந்த விக்கிரகங்களைத் தகர்த்து அவற்றின் கீழ் வைக்கப்பட்டிருந்த பெறு மதியான உலோகங்கள் உள்ளிட்ட பொருட்களை திருடிச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)



யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தால் யாழ்ப்பாண இந்துக் கல்லூரிக்கு ஒரு தொகுதி நூல்கள் அண்மையில் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன.
(படம்-சிவசாந்தன்)

## டெங்கு பரவலை தடுக்க

# மக்களின் நடத்தைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும்

## சுகாதார தரப்பு

(சாவகச்சேரி)
மக்கள் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டால் டெங்கு நோய்ப் பரவலை இலகுவாக கட்டுப்படுத்த முடியும் என சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே மேற்படி அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் தற்போது நாட்டில் டெங்கு நோய் நிலைமை அதிகரித்துக் காணப்படுகிறது.

தெளிந்த நீரில் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கக்கூடிய நுளம்புகளின் ஊடாகவே டெங்கு வைரஸ் கடத்தப்படுகிறது. நாம் இந்த நுளம்புகளை கட்டுப்படுத்த எமது சுற்றுப்புற சூழலில் காணப்படுகின்ற நீர் தேங்கக்கூடிய பாத்திரங்களை பாதுகாப்பாக நீர் தேங்காத இடத்திற்கு மாற்றியமைக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் ஊடாகவே நுளம்பின் குடித் தொகையை கட்டுப்படுத்தி நோய்ப் பரவலைத் தடுக்க முடியும்.

தற்போது நுளம்புக் கட்டுப்பாட்டிற்கு விசிறும் இரசாயன மருந்துக்கு தட்டுப்பாடு காணப்படுவதால் எமது சுற்றுச் சூழலை நாமே சுத்தமானதாக மாற்றியமைப்பது மிக முக்கியமானது.

இது சம்பந்தமான அறிவு மக்களிடம் காணப்படுகிறது. இருந்தாலும் மக்களின் நடத்தையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அத்துடன் இரண்டு நாட்களுக்கு மேலாக காய்ச்சல் நீடித்தால் உடனடியாக அரசாங்க மருத்துவமனைக்கு சென்று உரிய குருதிப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

மக்கள் சரியாக விழிப்புணர்வடைந்து சுற்றுச் சூழலை முறையாக பராமரித்தால் இலகுவாக நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியும் என மேலும் அவர் தெரிவித்தார். (4-30)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)
இமை மீடியா குழுமத்தின் ஏற்பாட்டில் விவசாயத்தில் செயற்கை நுண்ணறிவுப் பிரயோகம் தொடர்பான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு யாழ். பல்கலைக்கழகம் முன்பாக உள்ள IPS வளாகத்தில் தி.ரவிமயூரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடக்கு ஆளுநர் திருமதி.பி.எச்.எம் சார்ள்ஸ், திருநெல்வேலி SIPS Campus விரிவுரையாளர் கலாநிதி சி. செல்வநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

# இறுவெட்டும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)
திருச்செல்வம் தவரத்தினம் எழுதிய "சிறுவர் பாடல்" காணொளி இறுவெட்டு மற்றும் "ஈழத்து மனையடி சாத்திரம் நூல்" வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யா/ அராலி முருகமூர்த்தி வித்தியாசாலையில் உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சந்திரலிங்கம் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி செயலக மேலதிக செயலாளர் இ. இளங்கோவன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், முள்ளியவளை இலங்கை வங்கி முகாமையாளர் ப. செல்வகுமார் மற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி. நி.பாரதி ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.(4)

# இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறுதிருமுருகனின் 62 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு பிறந்தநாள் அறநிதியச் சபை நடத்தும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் வைபவம் நாளை 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வலி வடக்கு பிரதேச செயலர் ச. சிவஸ்ரீ, யாழ். அரச அதிபர் அ. சிவபாலசுந்தரம், யாழ். பல்கலை விஞ்ஞானத்துறை பீடாதிபதி பேராசிரியர் பு. ரவிராஜன் துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சு. செந்தில் ராஜக்குருக்கள், நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம்முறை இளைய தலைமுறை ஆற்றலாளர் விருதினை முல்லைத்தீவு அரச வைத்திய சாலை வைத்திய கலாநிதி வே. ஜெகரூபன், வலி.மேற்கு பிரதேச செயலர் எழுத்தாளர் திருமதி. பிறேமினி பொன்னம்பலம் ஆகியோர் பெறவுள்ளனர். (4)



நாதஸ்வர வித்துவான் கலைமாமணி குமார் பஞ்சமூர்த்திக்கு இந்தியா தருமபுர ஆதீனத்தால் உயர்ந்த விருதான நாதஸ்வர கலாநிதி விருதும் தங்கப் பதக்கமும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
(படம் - சிவசாந்தன்)

# பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)
அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், அருணோதயம் மலர் வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு சிவஞானசோதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.


கல்லூரி அதிபர் ஞா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரஸ், சிறப்பு விருந்தினராக வலிகாம கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜமுனா இராஜசீலன், கௌரவ விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவர்சங்க கொழும்பு கிளையின் தலைவரும், ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளருமான ஐ.சிவயோகநாதன், அமரர் சிவஞானசோதியின் பாரியார் திருமதி. குறமகள் சிவஞானசோதி ஆகியோரும் நினைவுப் பேருரையை வவுனியா பல்கலைக்கழக சுற்றுப்புற சூழல் அறிவியல் துறை, பிரயோக விஞ்ஞான பீட பேராசிரியர் திருமதி. அனந்தினி நந்தகுமாரனும், மலர் ஆய்வுரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து நாகரிக துறை சிரேஸ்ட விரிவுரையாளர் சி.ரமணராஜாவும் ஆசியுரையை அளவெட்டி கும்பழாவளை விநாயக ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ சோம. குமரதாசகுருக்கள் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (4-6-90)



ஆசிய பசுபிக் பிராந்திய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் குருநகர் புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலையில் தரம் எட்டு முதல் பதினொன்று வரை கல்வி கற்கின்ற 125 மாணவர்களுக்கான 4 இலட்சம் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.
(படம்- சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூதுவர் ஜூலி சங் ஆளுநர் செந்தில் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங், கிழக்கு மாகாண புதிய ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோருக்கு இடையில் முக்கிய சந்திப்பொன்று, நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போது அமெரிக்க-இலங்கை உறவுகள் மற்றும் சமூகப் பொருளாதார அபிவிருத்தியில் கவனம் செலுத்துவதற்கும் மாகாணத்தின் பல தரப்பட்ட சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கும் கலந்துரையாடப்பட்டன என்று ஜூலி சங் டுவிட் செய்துள்ளார். (நி)

# கொள்கைகளை மாற்றாவிட்டால் நாட்டிற்கு எதிர்காலம் கிடையாது

## பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

நாட்டுக்காக ஆளும் மற்றும் எதிர்த்தரப்பினர் தமது கொள்கையை மாற்றிக் கொள்ளாவிட்டால் இந்த நாட்டுக்கு எதிர்காலம் என்பதொன்று கிடையாது என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித் தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிதி ஒழுங்குபடுத்தல் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியதாவது.

"பொருளாதார பாதிப்புக்கு ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் ஏதாவதொரு வழிமுறையில் பொறுப்புக் கூற வேண்டும். அரசியல் காரணிகளை முன்னிலைப்படுத்தி பொருளாதாரம் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டதால் தற் போது பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்து அதன் பொறுப்பு ஒரு அரசாங்கத்தின் மீது மாத்திரம் சுமத்தப்பட்டுள்ளது.

அரசமுறை கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத பின்னணியில் நாடு வங்குரோத்து நிலையை அடைந்து விட்டது. வெளிநாடுகளின் ஒத்துழைப்புடன் நாட்டில் முன்னெடுக்கப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அரசியல்வாதிகளை கடுமையாக விமர்சிப்பதால் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தி பணிகளை ஒருபோதும் தொடர முடியாது.

நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமாயின் தேசிய மற்றும் வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைக்க வேண்டும். கடன்களை இந்த வழிமுறையில் தான் மறுசீரமைக்க வேண்டும் என எம்மால் குறிப்பிட முடியாது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே கடன்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும். தேசிய மற்றும் அரசமுறை கடன்களை மறுசீரமைக்காமல் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியாது.

பொருளாத்ர மீட்சிக்கான சிறந்த கொள்கை இல்லாமல் மக்களை ஏமாற்றி ஆட்சியதிகாரத்தை கைப்பற்றலாம். ஆனால், அரசாங்கத்தை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியாது.

நாட்டுக்காகவே அரசாங்கம் பிரபல்யமடையாத தீர்மானங்களை எடுத்துள்ளது. இது அரசியல் ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தலாம். வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் அரசியல் காரணிகளுக்கு முக்கியத்துவம் வழங்க முடியாது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள வேண் டு மாயின் அரசியல் வாதிகள் பாரம்பரியமான கொள்கைகளில் இருந்து விடுபட வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி)


**வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.**
**ஆதனப் பெயர்மாற்றம்**
64, மூளாய் வீதி, 4ம் ஒழுங்கை, வட்டாரம் - 11

வலிகாமம் மேற்கு பிரதேசசபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 11. மூளாய் வீதி, 4 ஆம் ஒழுங்கையிலுள்ள இல: 64 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **குழந்தைவேலு இராசா** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **கந்தையா சோமசுந்தரமும் பெண் சர்வேஸ்வரியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு கி.வைரமுத்து முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1065/16.07.1988 ஆம் இலக்க உறுதியால் ரங்கநாதன் பாலசுப்பிரமணியமும் பெண் ரஞ்சினியும், கனகசபை இரத்தினசிங்கமும், ஐயாத்துரை செல்லம்மாவும், கிருஷ்ணபிள்ளை சீனிவாசகமும், கைலாயபிள்ளை மகள் தனலட்சுமியும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்களோ, முற்பதிவு விபரங்களோ எதுவும் குறிப்பிடப்படவில்லை.

குறித்த **கந்தையா சோமசுந்தரமும் பெண் சர்வேஸ்வரியும்** ஆகியவர்கள் ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **கந்தையா சோமசுந்தரமும் பெண் சர்வேஸ்வரியும்** ஆகியவர் களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். (15741)

**தவிசாளர்/ செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**


# அனைத்து அரச நிறுவனங்களிலும் வெள்ளிக்கிழமை தோறும் டெங்கு ஒழிப்புத் திட்டம்

(கொழும்பு)

அனைத்து அரச நிறுவனங்களும் நேற்று முதல் வெள்ளிக்கிழமைகள் தோறும் டெங்கு ஒழிப்புக்காக 2 மணித்தியாலங்களை ஒதுக்க வேண்டும் என பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நிறுவனங்களின் தலைவர்களுக்கு இதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அசோக தெரிவித்தார்.

அதற்கான சுற்றறிக்கையை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, டெங்கு அதி அபாய வலயங்களாக காணப்படும் பகுதிகளில் நோய் தடுப்பு பணிகளுக்கான இணைப்பு செயற்பாடுகளுக்காக மாகாண ஆளுநர்களின் விசேட இணைப்புச் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் நளீன் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

நுளம்பு பெருக்கத்தை தடுப்பதற்கான வேலைத்திட்டங்களை அனைத்துப் பகுதிகளிலும் உரிய வகையில் முன்னெடுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 37,209 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அவர்களில் 18,420 பேர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 61 சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவு தொடர்ந்தும் டெங்கு அதி அபாய வலயங்களாக காணப்படுவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு அறிவித்துள்ளது. (நி)

# காட்டு யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழப்பு

(திருமலை)

திருகோணமலை பிரதேசத்தில் காட்டு யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் திருகோணமலை - வான்எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜயந்திபுர பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வான்எல பகுதியைச் சேர்ந்த டபிள்யு. பஸ்நாயக்க ஐம்பது வயதுடைய இரண்டு பிள்ளையின் தந்தை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

வயலுக்கு துவிச்சக்கர வண்டியில் சென்றபோதே வான் எல பிரதான வீதியில் மறைந்திருந்து காட்டு யானை தாக்கியுள்ளது.

யானையின் தாக்குதலுக்குளளான நபரை அருகில் இருந்தவர்கள் உதவியுடன் கந்தளாய் தள வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றபோதே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 350 | 400 | 500 |
| உருளைக்கிழங்கு | 200 | 150 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 260 | 200 | 280 | 350 |
| தக்காளி | 320 | 300 | 300 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| கோவா | 400 | 380 | 450 | 400 |
| கரட் | 260 | 360 | 400 | 450 |
| பூசணி | 80 | 100 | 80 | 100 |
| புடோல் | 160 | 160 | -- | 300 |
| வாழைக்காய் | 120 | 90 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 140 | 150 |
| பாகற்காய் | 450 | 450 | 600 | 600 |
| வெண்டக்காய் | 200 | 160 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 160 |
| பயற்றங்காய் | 400 | 400 | 350 | 300 |
| லீக்ஸ் | 360 | 380 | 400 | 450 |
| பீற்றூட் | 350 | 300 | 280 | 500 |
| கறிமிளகாய் | 350 | 350 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 1000 | 900 | 800 | 1000 |
| போஞ்சி | 550 | 450 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 450 | 300 | 500 | 450 |
| கீரை - 1 பிடி | 140 | 140 | 150 | 100 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 90 | 90 | 80-110 |
| இராசவள்ளி | 350 | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 500 | 700 | -- | 600 |
| முள்ளங்கி | 80 | 200 | -- | 300 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 40 |
| [illegible] | 140 | 160 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 189





அமுதனுடைய தாய் இன்னும் உரத்த கூச்சல் புலம்பலுடன் திடீரென்று கதவை விட்டாள். இரண்டு மூன்று பேர் கீழே உருட்டியடித்துக் கொண்டு விழுந்தார்கள். மற்றவர்கள் அவர்களை மிதித்துக் கொண்டு உள்ளே புகுந்தார்கள்.

"ஆள் இங்கே இருக்கிறான்!" என்று ஒருவன் கத்தினான். "அகப்பட்டுக் கொண்டானா?" என்றான் இன்னொருவன். "ஓடப் போகிறான்! பிடித்துக் கட்டிப் போடுங்கள்!" என்றான் இன்னொருவன்.

ஊமை மேலும் புலம்பினாள். "ஒரே இரத்த விளாறாக இருக்கிறதே!" என்று ஒருவன் கூவினான். ஊமை கைவிளக்கைத் தூக்கிப் பிடித்துக் கீழே கிடந்தவனைச் சுட்டிக் காட்டி, "பே!பே!பே" என்றாள். "அடே! இவன் வேறு ஆள் போலத் தோன்றுகிறதே!"

"பே! பே!" "நேற்று இங்கு வந்திருந்தவன் தானா இவன்?" "பே! பே!" "உன் மகன் எங்கே?" "பே! பே!" "ஊமைப் பிணமே! சற்றுச் சும்மா இரு! அடே! இவனை நன்றாய்ப் பாருங்கள்! அடையாளம் யாருக்காவது தெரியுமா?"

"அவன் இல்லை!" "அவன் தான்!" "இல்லவே இல்லை!" "பே! பே!" "எப்படியிருந்தாலும் இவன் வேற்று ஆள்! தூக்குங்கள் இவனை! கொண்டு போகலாம்!" "பே! பே! பே! பே!" "சனியனே! சும்மா இரு!"

நாலுபேர் சேர்ந்து கந்த மாறனைத் தூக்கினார்கள். "பே! பே! பே! பே!" என்று அமுதனுடைய அன்னை இடைவிடாமல் அலறினாள். "அடே! குதிரைச் சத்தம் கேட்கிறதடா!" "பாதிப் பேர் இவனைத் தூக்குங்கள்! பாதிப் பேர் ஓடிப் போய்ப்பாருங்கள்!" "எல்லோரும் ஓடுங்கள்! இவன் எங்கும் போய்விட மாட்டான்."

தூக்கிய கந்தமாறனைக் கீழே போட்டுவிட்டு எல்லோரும் ஓடினார்கள். "பேப்பே! பேப்பே! பேப்பே!" என்ற அமுதன் அன்னையின் ஓலம் அவர்களைத் தொடர்ந்து வந்தது.

## நாற்பத்து மூன்றாம் அத்தியாயம்

## பழையாறை

வந்தியத்தேவன் வழியில் பல கஷ்டங்களுக்கு உள்ளாகி, பல அபாயங்களுக்குத் தப்பிப் பழையாறை நகருக்கு வந்து சேர்வதற்கு முன்னால், நம்முடன் பழையாறைப் பதிக்கு விஜயம் செய்யும்படி நேயர்களை அழைக்கிறோம்.

அரிசிலாற்றுக்குத் தென் கரையில் நின்று அந்நகரைப் பார்ப்போம். அடடா! வெறும் நகரமா இது? தமிழ்த்தாயின் அழகிய நெற்றியில் தொங்கும் ஆபரணத்தைப் போல அல்லவா விளங்குகிறது? பச்சை மரகதங்களும், சிவந்த ரத்தினங்களும், நீலக்கற்களும் பதித்த நெற்றிச் சுட்டியைப் போல அல்லவா திகழ்கிறது!

நதிகளும் ஓடைகளும் தடாகங்களும் கழனிகளும் புது நீர் நிறைந்து ததும்புகின்றன. அவற்றில் பல வர்ண மலர்கள் பூத்துத் திகழ்கின்றன. தென்னை மரங்களும் புன்னை மரங்களும் குளிர்ச்சியான பசுமையைப் பரப்புகின்றன.

இவ்வளவுக்கும் இடையிடையே விண்முட்டும் மணி மாடமாளிகைகளின் பொற்கலசங்களும், கோயில் கோபுரங்களின் உச்சியில் உள்ள தங்க ஸ்தூபிகளும் ஒளிவீசுகின்றன.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நேர்மை உயர்வு தரும்



சன்மானம் கொடுக்காமல் தப்பிக்க என்ன செய்யலாம் என்று யோசித்தார் சோமன்.

கெட்ட மனம்கொண்ட சோமன் பூபாலனைப் பார்த்து 'நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாய், நான் என்னுடைய பையில் வைர மோதிரம் ஒன்றையும் வைத்திருந்தேன் அது காணவில்லை. மரியாதையாக கொடுத்துவிடு, உன்னை சும்மா விடமாட்டேன்' என்று கத்தினான்.

பூபாலனுக்கு ஒன்றுமே புரியவில்லை, ஒருவேளை இவர் சொன்னது போல் வைர மோதிரம் இருந்து தொலைந்து போயிருக்குமா, நாம் தான் எடுக்கவில்லையே இவரிடம் சன்மானம் வாங்குவதை விட பிரச்சினையில் இருந்து தப்பிக்கலாம் என்று யோசித்தார்.

சோமனோ விடாமல் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தார். பூபாலன் பணப்பை கொண்டு வந்த செய்தியை ஊராருக்கு சொன்ன கடைக்காரர், கஞ்சப்பயல் சோமன் அப்படி என்னத்தான் பரிசு கொடுக்கப் போறான் என்று பார்ப்போம் என்று அனைவரையும் அழைத்து வந்தார். வந்த இடத்தில் பூபாலன் குற்றவாளி போல நிற்பதை கண்ட ஊரார் சோமனை சும்மா விடக்கூடாது இந்த பிரச்சினையை மரியாதை ராமனிடம் தான் கொண்டு சென்று தீர்ப்பு கேட்க வேண்டும் என்று சொன்னார்கள்.

சிறிது நேரத்தில் சோமன், பூபாலன், ஊர் மக்கள் அனைவரும் மரியாதை ராமன் முன்னால் போய் நின்றார்கள். சோமன் தான் பணப்பையையும், அதில் இருந்த வைர மோதிரம் தொலைத்த கதையையும் பூபாலன் தான் பணப்பை கண்டுபிடித்த கதையையும் சொன்னார்கள்.

ஏற்கனவே சோமன் அறிவித்த தண்டோரா பற்றி மரியாதை ராமனுக்கு தெரியும். அப்போ தண்டோரா போடும் போது வைரமோதிரம் பற்றி ஒன்றும் சொல்லாததும் தெரிந்தது தான்.

ஆக மொத்தம் சோமன் ஏமாற்றுகிறான் என்பதை புரிந்துகொண்ட மரியாதை ராமன், சோமனுக்கு சரியான தண்டனை கொடுக்க நினைத்து இவ்வாறாக தீர்ப்பு கூறினார் சோமன் தொலைத்த பையில் பணமும், வைர மோதிரமும் இருந்தது என்று அவரே சொல்லியிருக்கிறார். இப்போது பூபாலன் கொண்டு வந்த பையில் பணம் மட்டுமே உள்ளது.

ஆக இது சோமனின் பையே இல்லை, வேறு யாரோ தொலைத்த பை. அப்படி தொலைத்தவர் இதுவரை யாரும் புகார் கொடுக்கவில்லை, அவ்வாறு யாரும் புகார் கொடுக்காதவரை நம்ம ஊரு வழக்குப்படி கிடைத்த பணத்தில் 10 பங்கு அம்மன்கோயிலுக்குக் கொடுத்து விட்டு, மீதியை எடுத்தவரே வைத்துக்கொள்ளலாம்.

ஆக பூபாலன் அந்த பணத்தை தன் சொந்த உபயோகத்துக்கு வைத்துக்கொள்ளலாம், சோமனின் பணம் மற்றும் வைர மோதிரம் கொண்ட பையை கண்டு பிடித்தவுடன் சோமனே சன்மானம் கொடுப்பார், சபை கலையலாம்.'

மரியாதை ராமன் தீர்ப்பு சொன்னதும் சோமனுக்கு இதயமே நின்று போனது போல் ஆகிவிட்டது.

பூபாலன் கிடைத்த பணத்தில் 10 சதவீதம் அம்மன் கோயிலுக்கு கொடுத்துவிட்டு, மீதியை தன் சொந்த ஊருக்கு கொண்டு சென்று தொழில் செய்து நலமாக வாழ்ந்து வந்தார்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு ஒன்றுதான் அரசின் தயவை வேண்டும்.
உண்மைக்கு அது வேண்டியதில்லை.
– தாமஸ் ஜெபர்ஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தொல்லியல் திணைக்களம் ஒரு பயங்கரவாத அமைப்பா?

நாட்டில் என்ன நடக்கிறதென்பதே தெரியாமல் இருக்கிறது. அந்தளவுக்கு நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது.

ஆம், படையினர் தம்பாட்டில் காணி அபகரிப்பில் ஈடுபடுகின்றனர்.

அதற்கும் அப்பால் தனியார் காணிகளைக் கபளிகரம் செய்து அதில் விகாரை அமைக்கின்றனர்.

பாதுகாப்புப் படையினருக்கும் விகாரை அமைப்பதற்கும் என்ன தொடர்பு என்பது தெரியவில்லை.

அதேபோல விகாரை அமைப்பு விடயங்களில் நீதிமன்றம் பிறப்பிக்கின்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்த பொலிஸார் தயங்குகின்றனர்.

இதனால் நீதிமன்ற உத்தரவையும் மீறி விகாரைகள் கட்டப்படுகின்றன.

தவிர, சிவாலயங்கள் ஆக்கிரமிக்கப்படும் போது, அது தொடர்பில் பொலிஸார் வாய்மூடி மௌனமாக இருக்கின்றனர்.

அவர்களால் பௌத்த பிக்குகளைக் கட்டுப்படுத்த முடிவதில்லை.

அதேநேரம் தமிழ் மக்கள் அகிம்சை வழியில் போராட்டம் நடத்தினால், அவர்களைக் கைது செய்வது அச்சுறுத்துவது என பொலிஸ் அராஜகம் தலைவிரித்தாடுகிறது.

ஆக, இலங்கையில் பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் பௌத்த சிங்கள மக்களுக்காக மட்டுமே கடமையாற்றுகின்றனர் என்பதுபோல் தெரிகிறது.

அவர்கள் தமிழ் மக்களுக்கான பாதுகாப்பை – அந்த மக்களின் உரிமையைத் தாமே பாதுகாத்துக் கொடுக்க வேண்டும் என்று ஒருபோதும் நினைத்ததில்லை.

இந்தநிலையில் இப்போது தொல்லியல் திணைக்களம் தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு பயங்கரவாத அமைப்புப் போலச் செயற்படுகிறது.

தொல்லியல் சான்றுகளைப் பாதுகாத்தல் என்ற பேரில், தமிழ் மக்களின் வரலாற்றுச் சான்றாதாரங்களைக் கபளிகரம் செய்வதில் தொல்லியல் திணைக்களம் மிக மோசமாக நடந்து கொள்கிறது.

அதிலும் குறிப்பாக, வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவாலயங்கள் அமைந்த இடங்களை இலக்கு வைத்து தனது நடவடிக்கையைத் தொல்லியல் திணைக்களம் தீவிரப்படுத்தியுள்ளது.

இஃது இந்த நாட்டில் தமிழ் மக்களின் இருப்பை வேரறுக்கும் நோக்குடன் தொல்லியல் திணைக்களம் செயற்படுவதை உறுதி செய்கிறது.

இதில் வேடிக்கை என்னவெனில், இந்த நாட்டின் ஜனாதிபதி கூட, தொல்லியல் திணைக்களத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதாகும்.

ஆம், வடக்குக் கிழக்கில் தொல்லியல் திணைக்ளத்தின் பணிகளை இடைநிறுத்தி வைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டபோதிலும் அதனைத் தொல்லியல் திணைக்களம் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை.

மாறாக, இப்போது வடக்குக் கிழக்கில் தொல்லியல் திணைக்களம் அளவீட்டை நிறுத்த வேண்டுமென புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

இருந்தும் இதனையும் தொல்லியல் திணைக்களம் கருத்தில் எடுக்குமா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

எதுவாயினும் தொல்லியல் திணைக்களத்தின் பின்னணியில் தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத சக்திகள் இருப்பது உண்மை என்று கூறுவதில் தவறிருக்க முடியாது.

# இலங்கையில் கஞ்சாவை பயிரிட நிபுணர்களின் அனுமதி பெறப்பட்டது?

## இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம

(கொழும்பு)

முதலீட்டுச் சபையின் கீழ் முன்னோடித் திட்டமாக கஞ்சா பயிர்செய்கையை மேற்கொள்ள நிபுணர்களின் அனுமதி பெறப்பட்டதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முதலீடுகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று பிற்பகல் அரச முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சில் இடம்பெற்றது.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

முதலீட்டு சபை கஞ்சா பயிர்செய்கையை ஒரு முன்னோடித் திட்டமாக தொடங்குகிறது. அதற்கான முதலீட்டாளர்களை தேடி வருகிறோம். சமீபத்தில் வெளியான நிபுணர் குழு அறிக்கையில் முதலீட்டு சபையின் கீழ் முன்னோடி திட்டம் ஆரம்பிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதற்காக முதலீட்டாளர்கள் மற்றும் நிபுணர்களுடன் ஆலோசித்து வருகிறோம். விரைவில் சோதனையை தொடங்குவோம்.

அதற்கு நாம் ஒரு பகுதியை தேர்வு செய்ய வேண்டும். பெரும்பாலும் அது ஒரு வலயமாக இருக்கக்கூடும். அதிக அன்னியச் செலாவணியைக் கொண்டுவரும் சில முதலீட்டாளர்களுடன் இதைத் தொடங்க உத்தேசித்துள்ளோம்.

அவர்கள் கஞ்சாவை வளர்ப்பது மட்டுமல்லாமல், குறைந்தபட்ச தயாரிப்புகளையும் செயலாக்க வேண்டும். அது தான் நாட்டின் வருமானம். அதை செயற்படுத்துவது எவ்வாறு என்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. ஏனெனில் சட்டம் இயற்றப்பட்டவுடன், சர்ச்சைகள் இருக்கக் கூடாது. குழு அறிக்கையின்படி, அதை எப்படி செயற்படுத்துவது என்பது குறித்து எமக்கு அமைச்சரவை பத்திரம் தேவை என்றார். (ம-7,9)

# டுபாயில் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்த இளைஞனின் சடலம்

## யாழுக்கு எடுத்து வரப்பட்டது

(யாழ்ப்பாணம்)

டுபாயில் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்த கமலதாஷ் நிலக்சன் (வயது 26) என்ற இளைஞனின் சடலம், சம்பவம் நிகழ்ந்து ஒரு மாதத்தை அண்மித்த நிலையில் நேற்று முன்தினம் சுண்டிக்குழியில் அமைந்துள்ள அவரது இல்லத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இவர் கடந்த 2022 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பிற்காக டுபாய்க்கு சென்ற நிலையில் கட்ந்த மாதம் அன்று கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இவரது மரணம் ஒரு திட்டமிட்ட கொலையாக சந்தேகிக்கப்பட்ட வேளை, இது ஒரு தற்கொலை என அந்நாட்டு மருத்துவர்களால் அறிக்கையிடப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் சடலத்தை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டு வந்தவேளை, விமான நிலையத்தில் வைத்து பரிசோதித்த பொலிஸாரும் மருத்துவர்களும் இது ஒரு கொலை என்றும், சடலத்தை உடனடியாக வழங்க முடியாது என்றும், இதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது.

இந்நிலையில் தாயாரின் மிகுந்த போராட்டத்திற்கு பின்னர் சடலமானது நேற்று முன்தினம் சுண்டிக்குழியில் உள்ள அவரது வீட்டிற்கு கொண்டு வரப்பட்டு அவரது இல்லத்தில் நேற்றையதினம் இறுதிச் சடங்குகள் இடம்பெற்றன. (ம-7,9,104)

## பல இளைஞர்களை ஏமாற்றி பண மோசடி செய்த

### இரண்டு பெண்கள் கைது

இளைஞர்களை ஏமாற்றி பணம் மோசடி செய்த இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் தொழிற்சாலை ஒன்றில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பதுளை பிரதேச இளைஞர்களிடம் பணம் பெற்ற பதுளை, தெமோதர பிரதேசத்தைச் சேர்ந்த பெண்கள் இருவர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வு அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் அவுஸ்திரேலியாவில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி 18 இலட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளதாக 4 முறைப்பாடுகள் பணியகத்திற்கு கிடைத்துள்ளன.

அதன்படி, பணியகத்தின் செல்லுபடியாகும் உரிமம் இன்றி வேலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்த குற்றச்சாட்டின் பேரில், பதுளை, தெமோதர பகுதியில் வைத்து விசாரணை அதிகாரிகள் இந்த இரு பெண்களையும் கைது செய்தனர். (ம-7,9)

## தெல்லிப்பழைப் பகுதியில் மாணவர்களை தாக்கிய ஆசிரியர் கைது

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் மூன்று மாணவர்களை தாக்கிய குற்றச்சாட்டில் ஆசிரியரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியில் உள்ள பாடசாலையில் ஆசிரியர் ஒருவரால் மூன்று மாணவர்கள் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் இருவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிலையில் ஆசிரியர் தெல்லிப்பழை பொலிஸாரால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,9,33)

## யாழைச் சேர்ந்த மூவர் தமிழகத்தில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியை சேர்ந்த, ஒரே குடும்பத்தில் மூவர் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

படகு மூலம் தலைமன்னார் வழியாக தனுஷ்கோடியை அடுத்த கோதண்டராமர் கோவில் கடற்கரையை இவர்கள் சென்றடைந்துள்ளதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தஞ்சமடைந்துள்ள மூவரும் மண்டபம் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், தமிழக கரையோர பாதுகாப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அண்மைக்காலமாக இலங்கையிலிருந்து இதுவரை 253 பேர் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## மேலும் வலுவடைந்த ரூபாவின் பெறுமதி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி நேற்றைய தினம் டொலரின் கொள்வனவு விலை 295.63 ரூபாவாகவும் விற்பனை விலை 308.54 ரூபாவாகவும் பதிவாகியுள்ளதாகவும் மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார சீர்கேட்டுடன் உணவகம் உரிமையாளருக்கு 45 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

ஆனைப்பந்தியில் அமைந்துள்ள பிரபல அசைவ உணவகத்தில் அண்மையில் கொத்து றொட்டி வாங்கிய ஒருவர், பழுதடைந்த இறைச்சியுடன் கொத்துறொட்டி காணப்பட்டுவதாக பொதுச் சுகாதாரபரிசோதகர் பு.ஆறுமுகதாசனிற்கு முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து மாநகர சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் மாநகர பொது சுகாதார பரிசோதகர்கள் குழு குறித்த கடையினை பரிசோதித்தது.

பல்வேறு குறைபாடுகள் இனங்காணப்பட்ட நிலையில் உணவகத்திற்கு எதிராக மேலதிக நீதிவான் நீதிமன்றில் பு.ஆறுமுகதாசனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் கடை சீல் வைக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று வழக்கு நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, உணவக உரிமையாளரிற்கு எதிராக சுமத் தப்பட்ட 9 குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் நீதிமன்றம் 45,000 ரூபாய் தண்டம் விதித்தது. அத்துடன் கடையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகரால் அறிக்கை தாக்கல் செய்யப் பட்டதையடுத்து கடையினை மீள திறக்கவும் நீதிமன்றம் அனுமதிவழங்கியது.(4-6-33)

கொமர்ஷல் வங்கியின் வவுனியா கிளையின் 25 ஆம் வருட நிறைவினை முன்னிட்டு வவுனியா மாவட்ட



பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான சதுரங்க சுற்றுப் போட்டி கடந்த 20 ஆம் மற்றும் 21 ஆம் திகதி சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மற்றும் சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலையில் 4 பிரிவுகளாக சிறப்பாக இடம்பெற்றது.



யா/சென்றோக்ஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வு அண்மையில் பாடசாலை அதிபர் ஜே.எட்வின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பலநோக் குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எம்.எஸ் சத்தியதாசன் கலந்து கொண்டார்.



மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை,பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் மனநல ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் கடந்த மூன்று வருடங்கள்மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் தொகுப்பு,மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஸ்ரான்லி டிமேலிடம் வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டுள்ளது. (படம்- ஜோசப்நயன்)

## மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக் கலைமன்ற அறக் கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக் கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண்வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக் கோவிலில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக் கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளியமுறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள பேராசிரியர் S.காமாட்சி மற்றும் பேராசிரியர் G.R.சீதாலட்சுமி வழங்குவார்கள்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (4-6)

# வீதிப் பாதுகாப்பு வாரம்; மாணவர்கள் கவனயீர்ப்பு



(தருமபுரம்)

வீதிப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு நேற்று தருமபுரம் மத்திய கல்லூரி மாணவர்களினால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வீதி ஒழுங்குகளை வாகனசாரதிகள் கடைப்பிடியுங்கள், வீதி விபத்துக்களை தடுக்க வாகன சாரதிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாணவர்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பினர். (4-6-316)



நல்லையா அறக்கட்டளை நிறுவனத்தால் சர்வதேச மருத்துவ நல நிறுவனம் ஊடாக பல மில்லியன் பெறுமதியான மயக்க மருந்து இயந்திரம் நேற்று வவுனியா பொது வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

# மன்னார் தனியார் கல்வி நிறுவனங்கள் 6 மணியுடன் மூடப்பட வேண்டும்

## அரச அதிபர் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்களின் கல்வி நடவடிக்கைகள் மாலை 6 மணியுடன் நிறைவடைந்து கல்வி நிலையங்கள் மூடப்பட வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லிடி மேல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்களின் இயக்குநர்களுடன் அவசர கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 3 மணி அளவில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்டான்லி டிமெல் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன் போது பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.இதன்போதே அவர் இவ்வாறுதெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்,

ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களை முற்பகல் 11 மணிக்குப் பின்னர் ஆரம்பிக்க வேண்டும் கிழமையின் ஏழு நாட்களிலும் மாலை 6 மணியுடன் தனியார் கல்வி நிலையங்கள் மூடப்பட வேண்டும்.பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்கள் அவசரமாக பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறுபதிவு செய்யப்படாவிட்டால்நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மேலும் மாணவர்களின் ஒழுக்கம், ஆன்மிகம் போன்றவற்றில் தனியார் கல்வி நிறுவனங்களும் கவனம் செலுத்த வேண்டும்.

உரிய இருக்கை வசதி, சுத்தமான குடிநீர், சுகாதாரம் போன்றவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-6-285)

# உலக வங்கி பிரதிநிதிகள் வவுனியா விஜயம்



(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் உலக வங்கியின் நிதிப்பங்களிப்பில் செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்களை உலக வங்கி பிரதிநிதிகள் பார்வையிட்டதுடன் இயந்திரங்களையும் வழங்கி வைத்தனர்.

வவுனியா நெளுக்குளத்தில் உள்ள விவசாய திணைக்கள கட்டடத்தில் கலப்பின சோளம் உற்பத்தியாளர்களை சந்தித்த உலக வங்கி பிரதிநிதிகள் அவர்களுக்கான இயந்திர தொகுதிகளையும் வழங்கி வைத்திருந்தனர்.

இதனையடுத்து விவசாயிகளுடனான சந்திப்பிலும் கலந்து கொண்டனர். இதன்போது உலக வங்கியின் திட்ட பணிப்பாளர் ஜோன், வவுனியா பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் எஸ்.அற்புதசந்திரன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (4-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவாலையில்...

அவரது சடலம் மீட்கப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சடலம் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த உத்தரவேல் புவனேந்திரன் (வயது-65) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலதிக விசாரணைகளை இளவாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9,104)

## வயிற்றுக்குத்து...

அன்று வயிற்றுக்குத்து ஏற்பட்ட நிலையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளது.

ஆனாலும் வயிற்றுக்குத்து நிக்காத நிலையில் 21ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் 24ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 24ஆம் திகதி இரவு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார். (ம-7,9,33,60)

## விபரீத...

யில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நஞ்சருந்திய நிலையில் உயிருக்கு போராடிய குறித்த குடும்பஸ்தரை அயலவர்கள் மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமை புரியும் 48 வயதான குடும்பஸ்தரே இவ்வாறு உயிரை மாய்த்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9,30)

## இறக்குமதிக்...

ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 70% ஆக இருந்த பணவீக்கம் இப்போது 30%ஐ எட்டியுள்ளது, நான்காவது காலாண்டில் பணவீக்கம் ஒற்றை இலக்கத்தை எட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மூலதனப் பரிவர்த்தனைகளுக்கான கட்டுப்பாடுகளை முறையாக தளர்த்துவோம் என்றும் இவை இரண்டும் வணிக நடவடிக்கைகளை அதிகரிக்க உதவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7,9)

## இலங்கை அரசு...

டன் கலந்துரையாடியதாகவும் அந்த டுவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

110 மெகாவாட் அணுமின் உற்பத்தி நிலையத்தை இலங்கையில் ஸ்தாபிப்பது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அணுமின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான திட்டத்திற்கு அனுமதி வழங்கப்படுமாயின், அதற்கு தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை வழங்க தமது நாட்டு அதிகாரிகள் தயாராகவுள்ளதாக ரஷ்ய தூதுவர் கூறியுள்ளார். (ம-7,9)

## நாடு முன்னேற...

நாட்டில் சமாதானம், சமத்துவம் நிலவ வேண்டுமெனில் - பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தியில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமெனில் நிலையான - நிரந்தர அரசியல் தீர்வு விரைந்து காணப்பட வேண்டும் என்று சஜித் பிரேமதாஸவிடம் எடுத்துரைத்தேன்.

அதை அவர் ஏற்றுக்கொண்டார். மிகவும் முக்கியமான சந்திப்பு இது என்றார்.

இந்தச் சந்திப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிக்கையில்,

"நாட்டில் நிலவும் அரசியல் நிலைமைகள் தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டது. நாட்டின் ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள மரண அடி மற்றும் பொருளாதார ரீதியாக ஏற்பட்டுள்ள வீழ்ச்சி குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது" என்றார். (ம-7,9)

*(இது தொடர்பில் முன்னர் வந்த செய்தி உள்ளே)*

## அபாய...

களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தனியார் மருந்தகங்களில் ஔடதங்கள் அதிக விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக மருந்துகளுக்குத் தீவிர பற்றாக்குறை நிலவுவதுடன், அரசாங்கம் தீவிரமான நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

அரசாங்கத்திற்கு மருந்துப் பொருட்களை நன்கொடையாக வழங்கும் செயல்முறைகளும் பல காரணங்களால் தடைப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-7,9)

## இளம்...

வேலாயுதம் சாரங்கனே (வயது-38) உயிரிழந்தவராவார்.

திடீர் சுகவீனமடைந்த நிலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். (ம-7)

## இராட்...

வாய்ப்பு தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


புதிய ஆய்வொன்றின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த ஆய்வின் மூலம், அண்டார்டிக்காவில் நீருக்கு கீழ் ஏற்படும் நிலச்சரிவுகளால் பூமியின் வலப்பக்கத்தில் உள்ள கடலில் இராட்சத சுனாமி ஏற்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மில்லியன் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இது போன்ற சுனாமி ஏற்பட்டமைக்கான சான்றுகள் ஆய்வில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

அத்துடன், இந்த சுனாமி அலைகள் தென் அமெரிக்கா, நியூசிலாந்து முதல் தென்கிழக்கு ஆசியா வரை மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சுனாமி எச்சரிக்கைகளை அடையாளம் காணும் தொழில்நுட்பம் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட நிபுணர்கள் எச்சரிக்கை விடுக்கின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (ம-7,9)




### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி: 26/05/2023
சீட்டிழுப்பு இலக்கம்: 1581
வெற்றி இலக்கங்கள்: மீனம் 9 1 7 4 0 6
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2023.05.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1156
ஆங்கில எழுத்து: H
வெற்றி இலக்கங்கள்: 44 67 70 73
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

### கொவிசெத

திகதி: 2023.05.26
சீட்டிழுப்பு இலக்கம்: 3368
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 01 21 52 75
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி: 26/05/2023
சீட்டிழுப்பு இலக்கம்: 1474
வெற்றி எழுத்து: L
சுப்பர் இலக்க: 17
வெற்றி இலக்கங்கள்: 03 08 23 78

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி: 2023.05.26
சீட்டிழுப்பு இலக்கம்: 435
வெற்றி இலக்கினம்: கடகம்
வெற்றி இலக்கங்கள்: 05 10 27 30
கடகம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி: 2023/05/26
சீட்டிழுப்பு இலக்கம்: 5126
ஆங்கில எழுத்து: K
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 4 1 6 3 6 4
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் ▸ 2100
நிறம் ▸ இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி ▸ 2023.05.26
தினம் ▸ வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: Z 18 27 48 68
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,671,360/-
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

### சனிதா

வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி:2023.05.26
வெற்றி வாரம்: 4261
வர்ணம்: செம்மஞ்சள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 46,803,573.00
வெற்றி இலக்கங்கள்: 11 26 69 75
ஆங்கில எழுத்து: F
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சசிரி SASIRI

வெற்றி வாரம் ▸ 328
சீட்டிழுப்பு திகதி ▸ 2023.05.26
பச்சை
வெற்றி இலக்கங்கள்: 22 | 23 | 29
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,822,120/-
www.dlb.lk

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 4,343,317.20
திகதி . 2023-05-26
வெற்றி வாரம் 3812
வர்ணம் கரும் நீலம்
வெற்றி இலக்கங்கள்: 10 39 48 55
கன்னி
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,330,920/-

### கப்ருக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 37 05 33 58 74
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம்: 1276
வர்ணம்: ஊதா
திகதி: 2023.05.26
வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 332,926,321.40
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அத கோடிபதி ADA KOTIPATHI

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 1926
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி : 2023.05.26
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 50,119,936/-
வெற்றி இலக்கங்கள்: 01 16 50 59
ஆங்கில எழுத்து: N
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



நெடுந்தீவு விசுவலிங்கம் பேக்கரி உரிமையாளரும்
மாவலித்துறை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி ( பிடாரி ) அம்மன் ஆலய
தர்மகர்த்தாவும் ஆகிய

**அமரர் கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம்**
அவர்களின் அன்புத் துணைவியார்.

**அமரர்**

## விஸ்வலிங்கம் கனகம்மா

அன்னை மடியில் : 12.07.1933 ஆண்டவன் அடியில் : 17.05.2013

திதி : 27.05.2023 (அட்டமி )



அன்பின் வடிவமாய்
எம்மை ஆதரித்த அன்னையே
இப்புவியில் எம்மை விட்டு
எங்கம்மா சென்றாய்
நித்தமும் புலம்புகின்றோம்.
எமக்கு ஆதரவு யாரம்மா?
இத்துயர் தீர
எழுந்து வந்திடம்மா
ஆழி சூழுலகில் எம்மை
அன்பினால் வென்ற அம்மா
தோழிரு வலிமை குன்றி
துடிக்கின்றோம் உன்பிரிவால்
பாரிரு உலகில் உன்னை
பார்க்கவே முடியவில்லை
ஏழிரு உலகந்தன்னில்
எங்குதான் சென்றீரோ?

நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்**

(15743)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.